**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 120 /2018

PW-1 09-08-2024

| | |
|---|---|
| Name | சந்திரபோஸ் |
| Father's/Husband's Name | சண்முகம் |
| Village | கடம்பூர் |
| Taluk | கயத்தார் |
| Caste | _ |
| Calling | கூலி |
| Religion | _ |
| Age | 41 |

(A1 to A6 present)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் கடம்பூரில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிகளை தெரியும். ஒரே ஊர்க்காரர்கள். கடந்த 03.05.2017 தேதி மாலை 6.30 மணிக்கு மஞ்சள் நீராட்டுவிழா நடந்தது அதில் கொட்டு அடித்து கொண்டு செல்லும்போது ஆடிக்கொண்டிருந்தார்கள்.

2) அப்போது 1ம் எதிரி செல்லத்துரை ஆடிக்கொண்டிருந்த சிறுவர்களை சத்தம் போட்டார். நான் 1ம் எதிரியை பார்த்து சிறுவர்களை எதற்கு சத்தம் போடுகிறாய் என்று கேட்டேன். அதற்கு 1ம் எதிரி போடா புண்டை என்று மூக்கில் குத்திவிட்டார் ரத்தம் வந்தது. எதிரிகள் ராஜதுரை மற்றும் பாலமுருகன் என்னை அடித்தார்கள்.

3)சம்பவத்தை ஊர்காரர்கள் விலக்கிவிட்டார். பின்பு இரவு 09.30 மணியளவில் டேவிட், ஜான்,அலெக்ஸ், வினோத்கண்ணன் ஆகியோரை அவருடைய ஊருக்கு அனுப்பிவிட்டேன்.

4) இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். மும்மலைப்பட்டி ரயில்வேகேட் அடைத்திருந்ததால் அங்கு நின்றார்கள். அப்போது அங்கு ஆட்டோவில் வந்த எதிரிகள் அருவா மற்றும் கம்புடன் வந்து 2 வது சாட்சி அலெக்ஸை அரிவாளால் முதுகில் அடித்தார்கள். டேவிட்டை கம்பால் அடித்து பரபர வென்று ஸ்டேஷன் வரை இழுத்து சென்றார்கள். வினோத்கண்ணனையும் எதிரிகள் அடித்தார்கள்.

5) மேற்கண்ட சம்பவத்தை எங்கள் ஊர்காரர் என்னிடம் சொன்னார். நான் நேரடியாக காவல்நிலையம் சென்றேன். புகார் கொடுத்துவிட்டு நானும் அலெக்ஸ்ம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அங்கிருந்து கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். **நான் அளித்த புகார் மனு முழுவதும் அசா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் கூலி வேலை செய்கிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. சம்மவத்தன்று மாரியப்பன், கடற்கரை, மாடசாமி ஆகியோர் சேர்ந்து எங்கள் ஊர் கோவில் கொடை விழாவை ஏற்று நடத்தினார்கள் என்றால் சரியல்ல.

2) சம்பவத்தன்று மாலை எனது உறவினர்கள் பால்ராஜ், துரைப்பாண்டி, வினோத்கண்ணா மற்றும் அலெக்ஸ் என்னுடைய மகன் ஆகியோர் குடித்துவிட்டு கொட்டு அடிக்கும் இடத்தில் ஆடிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல.

3) அப்போதுதான் 1வது எதிரி ஆடிக்கொண்டிருந்தவர்களை சத்தம் போட்டார்கள் என்றால் இல்லை. சிறு பையன்கள் தான் ஆடிக்கொண்டிருந்தார்கள். நான் எப்படி என் சொந்தகார பையன்களை ஆடக்கூடாது என்று சொல்லி நான் தான் 1 வது எதிரியை அடித்தேன் என்றால் சரியல்ல.

4) அப்போது நடந்த பிரச்சனையில் தான் எனது உறவினர் பால்ராஜ் டியூப்லைட்டை கழற்றி 1 வது எதிரியின் மீது அடித்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு அடித்ததில் 1வது

எதிரிக்கு காது கிழிந்து ரத்தம் வந்தது என்றால் இல்லை. 1வது எதிரியை 3,4 எதிரிகள் சேர்ந்து அன்று இரவு 9.20 மணிக்கு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றால் சரியல்ல.

5)அதை விசாரித்து மறுநாள் காலையில் என் மீதும் துரைராஜ் மற்றும் பால்ராஜ் மீதும் மற்றும் அடையாளம் தெரியாத இருவர் மீதும் போலிசார் வழக்கு பதிவு செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கின் குற்ற எண். 23/2017 U/s.147,148,294(2),427,323,324,506(2 ) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6) அந்த வழக்கானது சிசி 227/2017 ஆக இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த மன்விரோதமும் இல்லை.

7) புகார்மனுவை போலிசார் எழுதினார்கள். அதில் ஆங்கிலத்தில் எஸ் என்று எழுதி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். புகார்மனுவில் 6.45 மணிக்கு சம்பவம் நடக்கும்போதே போலிசார் மற்றும் உறவினர்கள் வந்து சத்தம் போட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

8) இரவு 9 மணிக்கு மேல் ரயில்வேகேட் அருகில் எதிரிகள் தாக்கியதாகவும் முத்துலட்சுமி என்ற பெயரில் உள்ள ஆட்டோவில் வந்ததாகவும் அவர்களோடு முத்துராஜ் என்பவர் உடன் வந்ததாகவும் புகார் மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

9) போலிசார் என்னை விசாரித்தார்கள். . வாக்குமூலத்தில் முத்துராஜ் என்பவர் வந்தார் என்று தவறுதலாகவும் முத்துலட்சுமி ஆட்டோவில் வந்தார்கள் என்று தவறுதலாகவும் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

10) 1ம் எதிரியை நான் அடித்துவிட்டேன் என்றாலும் அதனால் அவர் மருத்துவமனை சென்றுவிட்டார் என்பதால் என் மீது புகார் கொடுத்துவிடுவார் என்பதற்காகவும் நான்

வேண்டும் என்று மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து புகார்வாக்குமூலம் அளித்தேன் என்றாலும் சரியல்ல.

11) நான் சொன்ன மாதிரி சொன்ன நாளில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் புகார்மனுவில் ஒரு விபரத்தையும் வாக்குமூலத்தில் ஒரு விபரத்தையும் மாறி மாறி சொல்லி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் சொல்வது போல் எனக்கும் என் உடன் வந்தவர்களுக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் யாரும் என்னையும் என் உடன் வந்தவர்களையும் ஆபாசமாக பேசி மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

12) 2 மற்றும் 3,4 எதிரிகள் 1ம் எதிரியை மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டதால் சம்பவத்தின்போது அவர்கள் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கு சம்பவத்தின்போது 72 வயது என்பதால் அவர் நான் சொல்வது போல் யாரையும் தாக்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி